# பெண் படைப்பாளாரி ன் கவிதை வழி மனிதம்

**லெ.சாமுண்டீஸ்வாரி M.A., M. Phil., (NET).**

**உதவிப்பேராசிரியர்,**

**மதுரைக்கல்லூாரி , மதுரை**

21

**ஆய்வுச் சுருக்கம்:-**

இலக்கிய உலகில் மனித உணர்வுகளின் வெளிப்பாடானது, பல்வேறுபட்ட முகம் கொண்டு அமையும். அவற்றில் கவிதை உலகம் சிறப்பானக் குணம் அமைந்தது. நான்கு வாரி களோ, ஒரு பக்கப் படைப்போ உலகில் உள்ள அனைத்து நிலைகளையும் வெளிப்படுத்த கரம் கொடுக்கிறது. மனிதனுக்கு முகம் கொடுக்கும் அறிமுகம் போன்றே, அவன் சிந்தனை செயலாற்றலால் கவிதையாக கரம் வழியே ஊடுருவி வரக் கூடியதாகும். இக்கட்டுரைக்கு கவிஞர் அ. வெண்ணிலா அவர்களின் முகம் எனும் நூலை எடுத்துள்ளேன். மனிதனின் உணர்வுகளின் பிரதிபலிப்பாக கவிதைகள் அமையப்பெற்றுள்ளது. கவிதைகள் ஒவ்வொன்றும் பெண்களின் மனத்தில் எழும் அத்தனை கேள்விகளுக்கும் ஆறுதல் மருந்தாக உள்ளது. பெண்களைத் தாண்டி அவர்களின் ஒடுக்கப்பட்ட நிகழ்வுகளையும், உணர்வுகளுக்கு மதிப்பீடு இல்லாத நிலையை கவிஞர் எடுத்துரைத்துள்ளார் . அவற்றில் உணர்வுகளின் வழி படைப்பாக்கச் சிறப்பினையும், திறனாய்வின் மூலம் அவற்றின் கருத்துரைகளையும், ஆராய்ந்தறிதலில் உள்ளேன். மனிதம் பேசப்படும் இடங்களை ஆராய்ந்தும் படைப்பின் வழி ஆசிரியாரி ன் உணர்வுகளையும் வெளிக் கொணரப்பட்ட நிலையையும் எடுத்துரைக்க உள்ளேன்.

**ஆய்வு நோக்கம்:-**

படைப்பாளிகளின் ஒவ்வொரு படைப்பிற்கும் ஏதேனும் வேறுபட்ட மன உணர்வுகளோ, சூழல் அமைப்புகளோ காணப்படுவது இயல்பானது. படைப்பாளிகளின் வழிமுறைகளை பேசும் போது, அவாரி ன் ஆக்க சிந்தனைகளை, வரையறைகளை முழுவதுமாக உணர்ந்து படிக்க வேண்டும். படைப்பாக்கங்களின் வேறுபாட்டிழனைத் திறனாய்வு செய்து தொரி ந்துக் கொள்ள வேண்டும். திறனாய்வு கலையாக பல்வேறு வகைகளைக் கொண்டிருந்தாலும், நம் படைப்பாளியின் திறனாய்வு நோக்கம் அறிய வேண்டிய ஒன்றாகும். அவ்வாறு நான் எடுத்துக்கொண்ட படைப்பாக்கம் அ. வெண்ணிலா கவிதைகளில் நீரில் அலையும் முகம் எனும் படைப்பாகும். இக்கவிதைகளில் உள்ள ஆக்கச் செய்திகளையும் படைப்பாக்கத்தின் நோக்கத்தினையும் ஆராயலாம்

முதன்மைச் சொற்கள்:-

பெண் படைப்பாளர், உணர்வும் வெளிப்பாடும், மனிதமனம், இலக்கியவகைகள், கவிதை, கவிஞர்.

**உள்ளத்தின் உணர்வும், படைப்பாக்கமும்:-**

கவிஞாரி ன் உள்ளமே கருவறையாக கொண்டு படைப்புகள் பிறக்கின்றன. எதார்த்தங்கள் வாழ்வியல் இன்றும் பல்வேறு இடங்களில் நடைபெறுவது இயல்பு… மனிதன் பிறந்தது முதல் இறப்பு வரை சீராக ஒரே மாதிரி யான வாழ்க்கையை வாழ்ந்தான் என்று

யாரும் கூற முடியாது. சின்ன சின்ன நிகழ்வுகள் தவறுகளைப் புரிந்து தான் ஆக வேண்டும். இத்தகைய நிலைகளை கவிஞர்,

`“நேர்த்தியாக நடக்கத் தொரி யாமல்
குட்டுப்பட வேண்டியுள்ளது
ஜன்னலில், மேசையில், கதவிடுக்கில்”

என்று கூறுவதில் இயல்பான வாழ்க்கை நிலையினை உள்ளத்தில் உணர்வாக, நாம் அறிந்தவற்றையே படைப்பாக்கச் செய்துள்ளத் திறனறி ஆராய்வு மதிப்பிடத்தக்கது. உணர்வுப்பூர்வமான எந்த ஒரு செயலிலும் நமக்கான ஒரு ரசிப்புத்தன்மை கட்டாயம் பிறந்திருக்கக் கூடும்...

“ஜன்னலோரத்தைப் பார்க்கக் கூட முடியாமல்
அமைந்து போனது பயணம்... !

இந்த நிகழ்வு, நம் வாழ்வில் ஏதேனும் சூழல்களில் அமையப் பெற்று இருக்கும். இருப்பினும்....

“கிழிந்து நைந்து
வீடு திரும்புகையில்
வரவேற்றன இணைந்த கதவுகள்
மின்வெட்டு உபயத்தில்
இருளில் மூழ்கியது வீடு
அன்று
முழுநிலா பார்க்க
குளிக்க முடிந்தது”

என்ற இக்கவிதை முடிவுகளில் என்னதான் காலமும் சூழலும் ஏமாற்றம் தந்தாலும் வருத்தமான பயணமாக உருமாற்றினாலும், முடிவினில் முழுநிலா பார்த்து ஆறுதல் அடையும் உணர்வை எய்தச் செய்தது சிறப்பான ஒன்று தான். உள்ளத்தில் எல்லாக் காலமும் வலிஏற்படாது..... வலிமையைத் தந்து இன்பமாக்கும் காலமும் செயல்படும். முழு நிலா ரசிக்கும் உணர்வின் வழி படைப்பாக்கம் செய்த கவிஞாரி ன் நிலை, இக்கவிதையில் அறியப்படுகிறது. இதனை, வெ. இறையன்பு தனது நூலில்,

“நாற்று நடும் பெண்கள்
எல்லாமே சேறு
அவர்கள் பாடலைத் தவிர”

என்ற ஹைக்கூ கவிதையில் பெண்களின் நிலையைக் கூறும் போது வறுமை வழி பசி எனும் உணர்திறனால் சேறு பூசிக் கொண்டாலும் ரசனையான பாடலால் தங்களை மெருகேற்றும் திறன் பெற்றவர்களாக கூறுகிறார் .

”அறிவுக்கு விதையிட்ட
ஆசைமுகம் லேசாய் நினைவில்.....”

என்பதிலும்,

"கனவுகளை மடக்கி
என்னையும் சுருக்கிய
யதார்த்த முகந்தான்
ஆழமாய் இன்னும் கண்முன்"

என்ற வாரி களிலும் கவிஞர்களின் உணர்வு திறனானது `அப்பா' என்ற வார்த்தை, அனைத்து பெண் குழந்தைகளுக்கும் ஒரு பொக்கிஷமான ஒன்றாகும். அறிவுக்கு விதையிட்டு நம்மை நல்லதொரு உயர்வுக்கு ஏறிச் செல்ல பாதுகாக்கும் வீரர்….. எனலாம். நமக்கான கனவுகளை மடக்கி… அப்பாவிற்கான ஆசையைத்திணித்து கூறுவதாக,

"இத்தனை முகங்களையும் மீறி
அப்பாவின் முகமாய்
என்னுள் தேடித்தேடிப்பார் க்கிறேன்"

என்று கவிஞர் வாரி களின் முடிவில்,

" இன்னிக்கு நிலமைக்கு
டீச்சரானாப் போதும்
என் ஆசைக்கு
ஒம் புள்ளைய வளர்த்துக்கலாம்"

அருமையான வளர்ப்பாக இருந்தாலும் நியாயமான கனவுகள் ஒடுக்கப்பட்டு வாழ்ந்த பெண்களின் உணர்வுகளைப்படைப்பாக்கம் செய்ததில் புலப்படுகிறது. நிறைவேற்றப்படாத ஆசைகளின் வெளிப்பாடாக கவிதை அமையப்பெற்றிருப்பதை அறிய முடிகிறது.

உணர்வுகளிலும் உற்சாகத்திலும அனுபவங்களை உள்வாங்கி புலப்படுத்துவதிலும் ஏனைய மனிதர்களில் இருந்து கவிஞர்கள சற்றேனும் வித்தியாசப்பட்டவர்கள்" என்ற ஆசிரியாரி ன் கருத்தினைப் போன்றே பெண் படைப்பாளாரி ன் உள்வாங்கும் அனுபவம் நன்கு புலப்படுகிறது.

**பெண்படைப்பாளாரி ன் படைப்பில் மனிதம்:-**

இலக்கியம் என்பது மனிதனை அவன் படைப்பு வழி தனித்துவமாகக் காட்டக்கூடியது. மனிதனின் கருத்துக்கு சமூகம் தருகின்ற இடத்தை…. வாரி களின் வழியே வாழ்ந்து இலக்கியவாதிக் காட்டுகிறான். சில நேரங்களில் மனித முகங்கள் எவ்வாறெல்லாம் மாறுபடும் என்பதை….ஒரு பெண்ணாக உணர்ந்த விடயங்களைக் கவிதைதகளில் கொட்டித் தீர்த்துள்ளார் கவிஞர் அ. வெண்ணிலா… அமைதியாக எதையும் சிந்திக்காத சிதைந்த உள்ளத்தின் பிடியில் இருந்தாலும்

"அன்பு செய்து
அல்லாடுவதைக் காட்டிலும்
வாய்க்கால் கரையோரம்
புழுவில்லா தூண்டிற் போட்டு
உட்கார்ந்திருக்கலாம்
நீாரி ல் அலையும் முகம் பார்த்து"

மனித மனமானது அன்பு நிலையை கடக்கச் செய்யவே, சில நிகழ்வுகள் ஏற்படுகிறது. அன்புக்கு பிரதிபலனாக அன்பையே எண்ண

வேண்டும் என மனிதன் இருக்கக்கூடாது. தன்னால் இயன்ற அளவு தன்னையே அன்பு செய்து ரசித்துக் கொள்ள வேண்டும். மனிதர்கள் இன்று இயந்திரத்தனமான அன்பையும், மனம் வேறுபாடுகளையும், சாடல்களையும் கைப்பற்றி வாழும் நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். மனிததன் அன்பினை எதிர்பார்த்து வாழாமல்.... புழுவில்லா தூண்டில் போல.... மனதில் எதையும் சிந்திக்காமல், நீரி ல் அலைகின்ற முகத்தைப் பார்த்து ஆறுதல் அடைத்துக் கொள்ளலாம் என்கிறர் கவிஞர்.

புதையுண்ட மனிதம்... மக்களைப் பல்வேறு சுயநலப் போக்கிற்கு கவர்ந்துக் கொண்டு செல்கிறது. இதனுள்... உணர்வுகள் என்பது நீரில் அலைகின்ற நம் முகப்பிம்பங்களைப் பார்த்தறிவதே ஆகும். மனிதர்களுக்கு எத்தனை சாத்தியக் கூறுகள் இருந்தாலும் தனக்கான அமைதியான மனிதமே அவனை வாழ்வு வழிப்படுத்தும் என்பதை கவிதைவழி அறியமுடிகிறது.

”உறவின் அடையாளத்தை
உறுப்புகள் தாங்கியுள்ளன” என்ற கவிதை வாரி களில் பெண்களுக்கு மனிதம் என்பது என்ன செய்துள்ளது. அவர்களுக்கு வாழ்வியல் சங்கிலியாக குடும்பத்தையும், குழந்தையும் பிணைப்பிட்டு உள்ளது. உறவின் அடையாளத்தை பெற்றக் குழந்தைகள் வழியே அறிகின்றனர். மேலும் பிள்ளை பிறப்பிற்கு பின்னும் பெண் பாதுகாப்பு அடையாளங்களாக, தாலிக்கயிற்றையும், மெட்டியிலும் வகிட்டுக் குங்குமத்திலும் வைத்துள்ளனர். பெண்ணை ஏமாற்றும் கவசங்களாக பெண்ணை பிணைத்து வைக்கும் சங்கிலிகளாக.... காட்டப்படுகிறது. மனித சமுதாயத்தில் அனைவரும் சமம் என்ற நிலை மாறுபாட்டை உணர முடிகிறது.

”வண்ணங்களைச் சுரண்டும்
வன்முறை
எங்கு தான் இல்லாமலில்லை”

சிலந்தி வலையில் அகப்பட்ட மரவட்டையில் இருந்து ஆடைக்காக கொல்லப்படும் பட்டாம்பூச்சி வரை மனிதம் என்பதே இல்லாத நிலையில் விபத்தாக எண்ணிக் கொள்ள வேண்டும் என்கிறார் கவிஞர்.

மனிதம் என்பது சிலருக்கு இலையுதிர்காலம் போன்று தான் உள்ளது. உயிர் என்றால் ஒன்று தானே... மரவட்டை, பட்டாம்பூச்சி என்று உருவ அடிப்படையில் அவைகள் பாதிக்கப்படுகிறது.

**மாறுபடும் சூழலும் மனப் போராட்டங்களும்:-**

மாறுபடுகின்ற மனித மனமானது... சூழலுக்கு ஏற்றார் போல பேசி செயல்படுவதையேக் குறியீட்டாகக் கொண்டுள்ளது.

”வாசற்படி மேல் உட்காரி வது
பிடித்திருக்கிறது
- - - - - - - - - - -
- - - - - - - - - - -
படிச்ச பொண்ணு
பார் க்க நல்லாவா இருக்கு? அங்கலாய்க்கிறாள்
படித்ததா

பெண்ணாயிருப்பதா

தவறு எதுவோ!

மனிதர்கள் சாதாரணக் கல்லாகக் கண்டு மதிப்பதும், அதை சிற்பமாக்கி கடவுளாக்கிப் பார் ப்பதும், எப்போது நடக்கக் கூடியதே! பெண் குழந்தைகள் வாசலில் அமர்வதைக் கூட இனம் கண்டு சொல்வது... மனப்போராட்டத்தின் உச்சமாகிறது. படித்திருந்தால் எல்லாமே தொரி ந்திருக்க வேண்டும் என்பதல்ல.. இக்கட்டான காலகட்டத்தில் வாழ்கிறோம் பெண்ணாயிருப்பதும் அதனை விதிமீறலாக கொண்டு ஒரு செயலைச் செய்வதையும் சுட்டிக்காட்டி வாழ்கின்றனர். மேலும்,

”கிளையை விட்டு
வேருக்கு தீயிட்டுச் செல்கிறான்
அந்த நெடுஞ்சாலைக்காரன்
- - - - - - - - - - - - - - - - -
காற்றுடன் விளையாடிக் கொண்டிருக்கும்
கொழுந்திலைக்கு
மரணத்தைச் சொல்லப் போவது யார் ?

என்று ஒவ்வொரு உயிர் வாழ்க்கையிலும் ஏற்படப்போகும் சூழல்கள் முன்பே தொரி வதில்லை.

**முடிவுரை:-**

பெண் படைப்பாளர்கள் இலக்கிய உலகில் பல்வேறு வகைகளில் மனித அக உணர்வுகளைச் சித்தாரி க்கும் விஸ்வகர்மாவாகவே உள்ளனர். பெண் படைப்பாளி கவிஞர். அ. வெண்ணிலா கவிதைகளில் நீாரி ல் அலையும் முகம் என்ற நூலின் வழி பொரும்பான்மைச் சிந்தனைகள் பெண்களின் மனவழி ஊடுருவலாகவே உள்ளது. பெண்களால் சிந்தித்தாலும் செயல்படுத்த இயலாத சில நிகழ்வுகளை கவிதையின் மூலம் நன்கு செயல்படுத்திய செய்தியை அறிய முடிகிறது. குழந்தை பேறு, திருமணம், வேலைக்குச் செல்லும் பாதையும் பயணமும் என பெண்களை மையப்படுத்தி உணர்திறனை சித்தாரி த்த பாங்கு புலனாகிறது. நீாரி ல் நம் முகம் பார் த்தால், ஒரு சிறு அதிர் வுகள் தென்பட்டே அலைகளுக்கு இடையே நம் உருவம் தொரி யும். அது போலவே இவருடைய கவிதைகளில் சிறு சிறு நுணுக்கமான பெண்ணிய உணர்வுகளும் அதன் வெளிப்பாடுகளும் நன்கு அறிய முடிகிறது. பெண் படைப்பாளாரி ன் மையமான மனிதம் கவிதை வழி உருமாறியதை அறிய முடிகிறது.

**துணைநூல் பட்டியல்:-**

1. நீாரி ல் அலையும் முகம் – அ. வெண்ணிலா –
அகநி வெளியீடு
முதற் பதிப்பு டிசம்பர் 2001
2. ஏழாவது அறிவு - இறையன்பு – வெ
முதல் பதிப்பு ஜுலை 2005
நியூ செஞ்சுாரி புக் ஹவுஸ்
3. திறனாய்வுக் கலை - தி.சு. நடராசன்
நான்காம் பதிப்பு மே 2006
நியூ செஞ்சுாரி புக் ஹவுஸ்